பிரதமர் மோடி ஏப்.6ல் தமிழகம் வருகை

■ பாம்பன் புதிய ரயில் பாலம், ராமேஸ்வரம் – தாம்பரம் ரயில் சேவை திறந்து வைக்கிறார் ■ பொதுக்கூட்டத்திலும் பங்கேற்பு

ராமேஸ்வரம், மார்ச் 27: பிரதமர் மோடி ஏப்.6ம் தேதி தமிழகம் வருகிறார். அப்போது, பாம்பன் புதிய ரயில் பாலம், ராமேஸ்வரம் - தாம்பரம் ரயில் சேவையை துவக்கி வைக்கிறார். பின்னர் அங்கு நடக்கும் பொதுக்கூட்டத்திலும் பங்கேற்கிறார்.

ராமேஸ்வரம் அருகே பாம்பன் கடலில் ரூ.535 கோடியில் புதிதாக மின்சார ரயில் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. பாலம் திறப்பு விழாவிற்கான முன்னேற்பாடுகள் குறித்து, தெற்கு ரயில்வே பொதுமேலாளர் ஆர்.என்.சிங் தனி ஆய்வு ரயிலில் நேற்று காலையில் ராமேஸ்வரம் ரயில் நிலையம் வந்தார். அவருக்கு எஸ்ஆர்எம்யூ சங்கத்தினர் வரவேற்பு அளித்தனர். பின்னர் அவர், ரயில் நிலையத்தில் நடைபெற்று வரும் கூடுதல் விரிவாக்க பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். பின்னர் தெற்கு ரயில்வே பொதுமேலாளர் ஆர்.என்.சிங் அளித்த பேட்டியில், "பாம்பன் புதிய ரயில் பாலத்தை பிரதமர் மோடி ஏப்ரல் 6ம் தேதி திறந்து வைக்க உள்ளார். அதற்கான முன்னேற்பாடுகளை செய்து வருகிறோம். பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்கிறார். ராமேஸ்வரம் - சென்னை தாம்பரம் ரயிலையும் பிரதமர் கொடியசைத்து துவங்கி வைக்கிறார். திறப்பு விழா நிகழ்வை காண்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். பழைய ரயில் பாலத்தை பாகங்களாக பிரித்து மீண்டும் இணைப்பது தொழில்நுட்ப ரீதியாக கடினம். பாலத்தின் தன்மையும் மோசமான நிலையில் உள்ளது. ராமேஸ்வரம் - தனுஷ்கோடி இடையே ரயில் சேவை பணிகளை துவங்குவதற்கு சிறு பிரச்னைகள் உள்ளதால் தாமதம் ஆகும்" என்றார்.

ஆய்வில் ரயில்வே பாதுகாப்பு படை ஐஜி ஈஸ்வர ராவ், ரயில்வே மதுரை கோட்ட மேலாளர் சரத் ஸ்ரீவஸ்தவா, மூத்த கோட்ட செயல்பாட்டு மேலாளர் பிரசன்னா, மூத்த கோட்ட வணிக மேலாளர் கணேஷ் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

பிரதமர் மோடி மோடி வரும் ஏப்ரல் 5ம் தேதி ஒருநாள் பயணமாக இலங்கை செல்கிறார். அங்கிருந்து மறுநாள் (ஏப். 6) பகல் 12.15 மணியளவில் கிளம்பி, மண்டபம் முகாமில் உள்ள ஹெலிபேட் தளத்திற்கு ஹெலிகாப்டரில் வருகிறார். அங்கிருந்து காரில் புறப்பட்டு, புதிய ரயில் பாலம் திறப்பு விழா நடைபெறும் சாலைப்பாலத்தின் மையப்பகுதிக்கு வந்தடைகிறார். பகல் 12.45 மணிக்கு கொடியசைத்து புதிய ரயில் பாலத்தில் ரயில் சேவையை துவக்கி வைக்கிறார். அதன் பின்னர் ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயிலில் சுவாமி - அம்பாளை தரிசனம் செய்கிறார். அடுத்து, பேருந்து நிலையம் அருகே அரசு சுற்றுலாத்துறை கட்டுப்பாட்டில் இயங்கி வரும் ஆலயம் தங்கும் விடுதி வளாகத்தில் நடக்கும் பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார். சுமார் மூன்று மணி நேர நிகழ்ச்சியை முடித்து கொண்டு மாலை 3.30 மணிக்கு மேல் புறப்பட்டு மதுரை வந்து, அங்கிருந்து சிறப்பு விமானம் மூலம் டெல்லி செல்கிறார்.

ஏப்.6ம் தேதி திறப்பு ஏன்?

பாம்பன் புதிய பாலம் கட்டுமானப்பணிகள் முடிந்து 2 மாதங்களை தாண்டியும் திறப்பு விழா எப்போது என்ற கேள்வி எழுந்தது. பிரதமர் திறந்து வைக்க உள்ளதால், தேதிக்கான அறிவிப்பில் பல குழப்பங்கள் நிகழ்ந்தன. இந்த சூழலில்தான் ஏப்ரல் 6ம் தேதி திறப்பு விழா என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேதியை தேர்வு செய்ததற்கு முக்கிய காரணம் உள்ளதாக கூறப்படுகிறது. அதாவது, ஏப்ரல் 6ம் தேதி ராம நவமி தினம் ஆகும். இலங்கையில் உள்ள ராவணனுக்கு எதிராக ராமர் தனது படையெடுப்பை தொடங்கிய இடம் என்பதால், ராமருக்கும், ராமநாதபுரம் மாவட்டத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாக புராணங்களில் கூறப்பட்டுள்ளது. இதை மனதில் கொண்டுதான் ஏப். 6ம் தேதியன்று பாம்பன் பாலத்தை திறக்க முடிவெடுத்ததாக கூறப்படுகிறது.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
திருநெல்வேலி (நெ) நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் வட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.06/2024-2025/வ1/நாள்:25.03.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருநெல்வேலி அவர்களால் அரசு ஆணை. (நிலை) எண்.45 நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (HS 2) துறை, நாள்.29.03.2022-ன் படி **திருநெல்வேலி(நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்** கோட்டத்திற்குட்பட்ட அம்பாசமுத்திரம் நகரத்திற்கு புறவழிச்சாலை அமைத்தல் பணிக்கு மின்னியல் துறை வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் ஒருஉறை முறை இணைய வழியில் மட்டுமே **15.04.2025 அன்று 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, இணையதள வழியாக முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், முக்கிய நிகழ்வுகளின் நேரமும் தேதியும் மற்றும் அனைத்து இதர விபரங்களும் **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **27.03.2025 முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் ஏற்படின் அவைகள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் வட்டம், திருநெல்வேலி

செ.ம.தொ.இ/1187/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
மதுரை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒ.அ.எண். 44 / 2024-25 / தவஅ / நாள்: 20.03.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, மதுரை வட்டம் அவர்களால் **துணைப்பணி- சி.ஆர்.ஐ.டி.பி பணி 2023-24** தலைப்பின் கீழ் **பழநி** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த பணிக்கு இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளி **15.04.2025, 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **28.03.2025** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ / 1157 /ஒப்பந்தப்புள்ளி / 2025
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, மதுரை வட்டம்.

தமிழ்நாடு அரசு
மதுரை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒ.அ.எண். 46 / 2024-25 / தவஅ / நாள்: 24.03.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, மதுரை வட்டம் அவர்களால் **துணைப்பணி-சி.ஆர்.ஐ.டி.பி பணி 2023-24** தலைப்பின் கீழ் **பழநி** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த பணிக்கு இணையவழியில் மட்டுமே **சதவீத ஒப்பந்தப்புள்ளி 15.04.2025, 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **28.03.2025** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ / 1168 /ஒப்பந்தப்புள்ளி / 2025
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, மதுரை வட்டம்.

தமிழ்நாடு அரசு
நீர்வளத் துறை
தாமிரபரணி வடிநில வட்டம், திருநெல்வேலி– 627 002.
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.04க.பொ/தா.வ.வ/திலி/ 2024–2025/நாள்;25.03.2025
ஒப்பந்தப்புள்ளிபடிவம் : மொத்த ஒப்பந்தம் –விலைவிகித ஒப்பந்தப்புள்ளி

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக கண்காணிப்பு பொறியாளர், நீர்வளத்துறை, தாமிரபரணி வடிநில வட்டம், திருநெல்வேலி, அவர்களால் நீர்வளத்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து www.tntenders.gov.in என்ற இணையதளம் வாயிலாக அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் **16.04.2025 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு,** கண்காணிப்பு பொறியாளர், நீ.வ.து, தாமிரபரணி வடிநில வட்டம், திருநெல்வேலி அலுவலகத்தில் மின்னணு முறையில்திறக்கப்படும்.

மின்னணு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய நிர்ணயிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம்	:	28.03.2025 முதல் 15.04.2025 பிற்பகல் 3.00 மணி வரை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பதிவேற்றம் செய்ய இறுதி நாள் மற்றும் நேரம்	:	15.04.2025 பிற்பகல் 3.00 மணி வரை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் திறக்கப்படும் நாள், மற்றும் நேரம்	:	16.04.2025 பிற்பகல் 3.30 மணி
மொத்தப்பணிகள்	:	1(ஒன்று)
வேலையின் மொத்த மதிப்புத் தொகை	:	ரூ. 79.00 இலட்சம்

முன்வைப்புத்தொகை செலுத்த வேண்டிய விவரம், இதர விவரங்கள் குறித்த விதிமுறைகள் மற்றும் தகுதி விவரம் உள்ளிட்ட பிற அனைத்து விவரங்களும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி திருத்தங்கள், மாற்றங்கள் மற்றும் காலநீட்டிப்பு ஆகிய விவரங்கள் மேற்காணும் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

செ.ம.தொ.இ/1164/ஒப்பந்தப்புள்ளி/2024
கண்காணிப்பு பொறியாளர், நீ.வ.து., தாமிரபரணி வடிநில வட்டம், திருநெல்வேலி

கெங்கவல்லி அருகே பரபரப்பு

அரசு பள்ளி வகுப்பறையை சூறையாடிய மாணவர்கள்

பிளஸ் 2 இறுதி தேர்வு முடிந்ததும் அட்டகாசம்

கெங்கவல்லி, மார்ச் 27: கெங்கவல்லி அருகே, சாத்தப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில், பிளஸ்2 இறுதி தேர்வு எழுதிய மாணவர்கள், வகுப்பறையில் இருந்த மின்விசிறி, டேபிள், சேர்களை உடைத்து நொறுக்கி சேதப்படுத்தி விட்டு சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சேலம் மாவட்டம், கெங்கவல்லி அருகே சாத்தப்பாடி அரசு மேல்நிலை பள்ளியில் சுமார் 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். இப்பள்ளியை சேர்ந்த 101 மாணவர்கள், நடப்பாண்டு பிளஸ்2 பொதுத்தேர்வு எழுதினர். நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) பிளஸ்2 பொதுத்தேர்வு முடிவடைந்தது. பள்ளியில் இறுதி தேர்வு முடிந்ததும், பிளஸ்2 மாணவர்கள் சிலர், பள்ளி வகுப்பறையில் உள்ள மின்விசிறி, இரும்பு இருக்கைகள், டேபிள் உள்ளிட்ட பொருட்களையும் உடைத்து, நொறுக்கி சேதப்படுத்தினர். மேலும், தலைமை ஆசிரியர் அறையில் உள்ள கை கழுவும் குழாயை உடைத்துள்ளனர். இதனால் தலைமையாசிரியர் அறை முழுவதும் தண்ணீர் சூழ்ந்து, அறையில் வைக்கப்பட்டிருந்த மாணவர்கள் எழுதிய தேர்வு தாள்கள் மற்றும் பொருட்கள் முழுமையாக நனைந்து வீணானது. இதில் சில பேப்பர்களை மீட்டு எடுத்து, பள்ளி வளாகத்தில் வெயிலில் காயவைத்தனர். பிளஸ்2 தேர்வு எழுதி வெளியே செல்லும் மாணவர்கள், பள்ளி வளாகத்தில் உள்ள பொருட்களை சேதப்படுத்தியது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த சம்பவம் குறித்து, பள்ளி தலைமையாசிரியர் சரவணகுமாரிடம் பேசுகையில், 'எனக்கு பிளஸ்2 பொதுத்தேர்வு பணி, தலைவாசல் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மையத்தில் ஒதுக்கப்பட்டது. சாத்தப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு, பெத்தநாயக்கன் பாளையத்தில் இருக்கும் தலைமை ஆசிரியர் சரவணன், பார்த்துள்ளார். தேர்வு முடிந்த பிறகு, ஆசிரியர்கள் தேர்வு மையஅலுவலரிடம் பேப்பரை ஒப்படைத்து வருவதற்குள், இது போன்ற சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இதுகுறித்து முழுமையாக விசாரணை செய்து வருகிறேன்,' என்றார்.

▶ சேலம் மாவட்டம், சாத்தப்பாடி அரசு மேல்நிலைப்பள்ளியில், பிளஸ்2 இறுதி தேர்வு எழுதிய மாணவர்கள், வகுப்பறையை அடித்து நொறுக்கியதில் சேதமடைந்த மின்விசிறி. அடுத்த படம்: குழாயை சேதப்படுத்தியதால், தண்ணீர் வழிந்து சேதமான தேர்வு தாள்கள், வெயிலில் உலர வைக்கப்பட்டுள்ளன.

பள்ளிபாளையம் அருகே

ஓணானால் உடல் கருகிய லைன்மேன்

மின்கம்பத்தில் ஏறியவர் மீது மின்சாரம் பாய்ந்தது

பள்ளிபாளையம், மார்ச் 27: நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் ஆவத்திபாளையத்தை சேர்ந்தவர் துரை (50). மின்சார வாரியத்தில் லைன்மேனாக பணியாற்றி வந்தார். ஆவத்திபாளையம் காவிரி கரையில் உள்ள மின்சார கம்பத்தில் ஏற்பட்ட பழுதால் அப்பகுதியில் நேற்று மதியம் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இது குறித்து புகார் வந்ததும் லைன்மேன் துரை மின் துண்டிப்பு குறித்து சரிபார்க்க புறப்பட்டார். ஆதிநித்யானந்தா மடம் அருகே ஒரு மின்சார கம்பத்தில் ஓணான் ஒன்று, இரண்டு மின் கம்பியில் ஏறி உராய்ந்ததால் தீப்பொறி பறந்து மின்சாரம் துண்டிக்கப்பட்டது தெரியவந்தது. இதையடுத்து டிரான்ஸ்பார்மரை ஆப்செய்து விட்டு மின் கம்பத்தில் ஏறிய துரை, கம்பியில் சிக்கியிருந்த ஓணானை அப்புறப்படுத்த முயன்றார்.

அப்போது அதே கம்பத்தில் நீரேற்று நிலையத்திற்கு சென்று கொண்டிருந்த உயர் அழுத்த மின்கம்பியில் துரையின் கை எதிர்பாராவிதமாக உராய்ந்துள்ளது. இதனால் அவரது உடலில் மின்சாரம் பாய்ந்து கைகளில் தீக்காயம் ஏற்பட்டு கருகியது. மின் அதிர்ச்சிக்குள்ளான துரை, இடுப்பு கயிறு கட்டியிருந்ததால் அவரது உடல் கீழே விழாமல் தொங்கியது. இதை கண்ட அப்பகுதியினர் உதவிக்கு ஓடிவந்தனர். அக்ரஹாரம் மின்வாரிய அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. விரைந்து வந்த மின் அலுவலக பணியாளர்கள், கம்பத்தில் ஏறி சுமார் முக்கால் மணிநேரம் போராடி, கிரேன் மூலம் துரையை மீட்டு ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். உடலில் பல இடங்கள் கருகிய நிலையில் மேல் சிகிச்சைக்காக அவர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து குறித்து பள்ளிபாளையம் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

பைக்கில் கொண்டு சென்ற பெட்ரோல் தீப்பிடித்து உடலில் பற்றி வாலிபர் சாவு

கோபால்பட்டி, மார்ச் 27: திண்டுக்கல் மாவட்டம், கோபால்பட்டி அருகே கொரசினம்பட்டியை சேர்ந்தவர்கள் பத்மநாபன் (18) மற்றும் 17 வயது சிறுவன். இவர்கள் நேற்று முன்தினம் மாலை டூவீலரில் கோபால்பட்டி சென்று விட்டு பிளாஸ்டிக் கேனில் பெட்ரோல் வாங்கி கொண்டு மீண்டும் ஊருக்கு வந்து கொண்டிருந்தனர். டூவீலரை பத்மநாபன் ஓட்ட, சிறுவன் பின்னால் அமர்ந்து கொண்டு பெட்ரோல் கேனை கையில் பிடித்து கொண்டு வந்து கொண்டிருந்தார்.

நத்தம் சாலையில் கணவாய்பட்டி பங்களா பகுதியில் வந்தபோது சாலையின் குறுக்கே சென்ற சிறுவன் மீது டூவீலர் மோதியது. அப்போது பெட்ரோல் கேன் கீழே விழுந்து தீப்பற்றியதில் தீ, டூவீலர் மீதும் மற்றும் பத்மநாபன், பின்னால் அமர்ந்த சிறுவன் மீதும் பற்றி கொண்டது. தீக்காயமடைந்த இருவரையும் அங்கிருந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் செல்லும் வழியிலே பத்மநாபன் உயிரிழந்தார்.

TATA
டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையா சொத்து விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை, 30 நாள் மின்-ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எல்எல்) வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக 'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு' மேலும் 'உள்ளது எதுவோ அது' மற்றும் 'எந்த உத்தரவாதமும் இல்லாத' அடிப்படையில் 29–04–2025 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய 29–04–2025 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 28–04–2025 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்.

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை	20-03-2025 தேதிப்படி நிலுவைத் தொகை
1.	10025592	திரு. தயாநிதி K G, திரு. கணேசன் S	ரூ.1,65,84,482/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தைந்து லட்சத்து எண்பத்து நான்காயிரத்து நானூற்று எண்பத்திரண்டு மட்டும்) & 19–12–2023	ரூ.1,55,65,000/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தைந்து லட்சத்து அறுபத்தைந்தாயிரம் மட்டும்)	ரூ.15,56,500/- (ரூபாய் பதினைந்து லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து ஐந்நூறு மட்டும்)	கையக	ரூ.20313393/- (ரூபாய் இரண்டு கோடியே மூன்று லட்சத்து பதின்மூன்றாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்)

அசையா சொத்தின் விவரம்: இனம் – 1: நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், நாமக்கல் எண் 2ஆம் இணை சார்பதிவு மாவட்டம், நாமக்கல் தாலுகா, கொண்டிசெட்டிபட்டி கிராமத்தைச் சேர்ந்த சர்வே எண் 37/1 பாகம், தமிழ்நாடு வீட்டுவசதி யூனிட்டால் கையகப்படுத்தப்பட்டது மற்றும் நாமக்கல் கட்டம்–II வீட்டுவசதி பெயருடைய திட்டப் பகுதியின் கீழ் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்ட சொத்து, இந்த மனைகளில் அடங்கிய ஒரு மனை எண் H–1/5, இந்த விவரங்களுக்கு தொடர்புடையது. இதன் **எல்லைகள் மற்றும் அளவீடுகள் பின்வருமாறு:** மனை எண் H–1/11–க்குக் **கிழக்கில்,** 12 அடி வடக்கு–தெற்கு சாலைக்கு **மேற்கில்,** மனை எண் H–1/6–க்குத் **தெற்கில்,** மனை எண் H–1/4–க்கு **வடக்கில்.** மேற்படி எல்லைகளுக்கிடையே உள்ள **அளவீடு:** கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் – 18 மீட்டர், வடக்குத் தெற்காக பக்கங்கள் – 15 மீட்டர், மொத்தம் 270 சதுர மீட்டர் கொண்ட நிலம் முழுவதும் மற்றும் 78 சதுர மீட்டர் மற்றும் 20 சதுர மீட்டர் கொண்ட RCC தளமிட்ட கட்டடம் உட்பட. இத்துடன் மேற்படி கட்டடங்களின் அனைத்து பொருத்தல்கள் சேர்த்து. இத்துடன் அனைத்து வழிப்பாதை உரிமைகள் மற்றும் அங்கு இணைந்துள்ள புழக்க உரிமைகள் உட்பட. மேற்படி சொத்து நாமக்கல் நகராட்சி எல்லைகளுக்கு உட்பட்டது. **இனம்–2:** நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், நாமக்கல் எண் 1ஆம் இணை சார்பதிவு மாவட்டம், நாமக்கல் தாலுகா, நாமக்கல் கிராமம், நாமக்கல் நகராட்சிக்கு உட்பட்ட பழைய சர்வே எண் 108/3, TS எண் A–இன்டிடி, பிளாக் எண்: 2, TS எண் 18/9, உட்பிரிவுப்படி பட்டா எண் 6801, வார்டு–A, பிளாக்–A, TS எண் 18/9A2, பரப்பளவு 0.4047:0 சதுர மீட்டர், தீர்வை ரூ.2.25, இதிலடங்கிய பரப்பளவு ஏக்கர் 0.40 சென்ட் இதிலடங்கிய பரப்பளவு ஏக்கர் 0.17 சென்ட் கொண்ட நிலம் இந்த விவரங்களுக்கு தொடர்புடையது. இதன் **எல்லைகள் மற்றும் அளவீடுகள் பின்வருமாறு:** S. கணேசன் அவர்களின் சொத்துக்குத் **தெற்கில்,** TS எண் 21/1A–இல் உள்ள சின்னதம்பி அவர்களின் சொத்துக்கு **வடக்கில்,** சர்வே எண் 18/9B, 18/9C ஆகியவற்றில் உள்ள M.K. ராமசாமி அவர்களின் சொத்துக்கு **மேற்கில்.** மேற்படி எல்லைகளுக்கிடையே உள்ள பரப்பளவு ஏக்கர் 0.17 சென்ட் கொண்ட நிலம் அல்லது 7412 சதுர அடிக் கொண்ட நிலம் முழுவதும். இத்துடன் அனைத்து வழிப்பாதை உரிமைகள் மற்றும் அங்கு இணைந்துள்ள புழக்க உரிமைகள் உட்பட. மேலும் 26–1/2 சதுர அடி பொது வழிப்பாதை சேர்த்து. மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்து நாமக்கல் நகராட்சி எல்லைகளுக்கு உட்பட்டது.

குறிப்பு:– TCHFL–க்கு எதிராக கடன்தாரரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு (SA/378/2024) DRT–கோயம்புத்தூர்–இன் முன்னிலையில் நிலுவையில் உள்ளது. மேற்கூறிய வழக்கில் TCHFL–க்கு எதிராக தடை உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

ஏலதாரர்கள் ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன் உரிய விசாரணை செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏலம் வழக்கின் முடிவுக்கு உட்பட்டது.

ஏலத்தில், பொதுவாகப் பொதுமக்கள் தனிப்பட்டு தங்கள் ஏலப் புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். இந்த விற்பனைத் தொடர்பாக ஏதேனும் பணியைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் உரிமையைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.

விற்பனையானது கடனீட்டுச்சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் மேற்கொண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டது ஆகும்.

குறிப்பு: மின்–ஏலம் ஆனது http://bankauctions.in/ வலைதளம் மூலம் 29–04–2025 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 5 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனை: 1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன, ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்கமாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். **2.** அசையாச்